பதிவு எண்' M. 6311 ★ தொலைபேசி! 551331 ★ ... ! 1953 ★ ... ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: கார்த்திகை 9 (24—11—72) வெள்ளி ... வெளியூர்: கார்த்திகை 10 (25—11—72) சனி [இதழ்: 134

'பேர்' அணி!

அப்பாவி: —"வாக்காளர் பேரணி என்றால் என்ன?"

அரசியல்வாதி: —"பேருக்கு அணி—அதாவது, 'வாக்காளர்' என்ற பெயரால் பிடித்துக் கொண்டுவந்து நிறுத்தப்படுவோரின் அணி!"

ஆந்திரமெங்கும் இராணுவப் படை

கலவரங்களை அடக்க மாநில அரசு நடவடிக்கை

தாக்குதல் - சூறையாடல் - தீவைப்பு - வன்செயல்கள் தொடர்கின்றன

இந்திரா கட்சி ஆளும் மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு படும்பாடு

ஐதராபாத், நவ. 24—

ஆந்திரத்தில் நடைபெறும் கலவரத்தையொட்டி, சட்டத்தையும்—அமைதியையும் காக்கச் சிவில் அதிகாரிகளுக்கு உதவிட இராணுவத்தின் எட்டுப் படைப் பிரிவுகளை (கம்பெனிகள்) ஆந்திர மாநில அரசு அழைத்திருக்கிறது.

இவற்றில் மூன்று பிரிவுகள் ஐதராபாத்—செகந்திராபாத் நகரங்களில் பயன்படுத்தப்படுகின்றன; குண்டூர் மாவட்டத்தில் இரண்டு பிரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன; கிருஷ்ணா—ஓங்கோல்—கர்னூல் ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொரு பிரிவு பயன்படுத்தப்படுகிறது.

பொது மக்களுக்குப் பாதுகாப்பையும்—நம்பிக்கையையும் உறுதி கூறுகின்ற வரையில் இராணுவத்தினர் கலவரப் பகுதிகளில் அணிவகுப்புகளை நடத்துவார்கள்.

இராணுவ அதிகாரி தரும் தகவல்

ஆந்திரத்தில் உள்ள இராணுவ அதிகாரி பாலச்சந்திரன் நேற்று ஐதராபாத் நகரைச் சுற்றிப் பார்த்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்தார்; கலவரத்தை எப்படி அடக்குவது என்று அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

"போலீசாருக்கு உதவியாக ஐதராபாத்தில் மட்டும் இராணுவம் செயல்படவில்லை; ஆந்திர மாநிலம் முழுவதும் இராணுவம் அனுப்பப்படுகிறது" என்று அவர் கூறினார்.

இரயில்வேமீது தாக்குதல்

ஓங்கோல் மாவட்டத்தில் உள்ள சிராலா இரயில் நிலையத்தை 10,000 பேர் உள்ள கூட்டத்தினர் தாக்கினர்.

இரயில் நிலையத்திலிருந்த பணத்தைக் கைப்பற்றிக்கொண்டு—பொருட்களை நாசப்படுத்தினர்; பிறகு இரயில் நிலையத்திற்குத் தீ வைத்தனர்.

இந்தக் கூட்டத்தைக் கலைக்க இரயில்வே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கியால் சுட்டார்கள்; அதில் பலர் காயமடைந்தனர்.

எம்.எல்.ஏ. கைதானார்

இந்தப் போராட்டத்தையொட்டி போலீசு தடையுத்தரவை மீறியதாக ஆந்திர சட்டமன்ற உறுப்பினர் ரகிமான் நேற்று கைதுசெய்யப்பட்டார்; அவருடன் மேலும் 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

இரயில் நிலையங்கள் தீக்கிரையாயின

ஆந்திரத்தில் நடைபெறும் கலவரத்தில் இதுவரையில் 11 இரயில் நிலையங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கின்றன.

மற்றும் ஏராளமான இரயில் நிலையங்களைக் கலவரக்காரர்கள் தாக்கியதால், ஒலிபரப்புக் கருவிகள் — மேசை, நாற்காலிகள் நாசமடைந்தன.

கலவரம் மூன்றுவது நாளாக நேற்று தொடர்ந்து நீடித்தது; விஜயவாடா அருகிலுள்ள பேடவத்லபூடு என்ற இரயில் நிலையத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்துக் கொளுத்தினர்.

தனுகு — பீமாவரம் இரயில் நிலையங்களும், 'சிக்னல்' அறைகளும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

தெனாலியை அடுத்த சுந்துரு இரயில் நிலையத்தின்மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர்; இரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த சரக்கு இரயிலிலிருந்த பொருட்களைக் கொள்ளையடித்தனர்.

ஊழியர் குடும்பத்துக்கு உடனடி உதவி

அம்மனபரோலு என்னும் இரயில் நிலையத்தில் 2 தொழிலாளிகளைப் பூட்டி வைத்துத் தீ வைத்துக் கொளுத்தியது தெரிந்ததே; தீ எரிந்துகொண்டிருந்தபோது அவர்கள் இருவரும் சன்னல் வழியாக வெளியே குதித்துத் தப்பினர்.

அவர்களில் ஒருவரான சேக் அப்துல் ரகிமான் பலத்த தீக்காயங்களுடன் குண்டூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்; அங்கு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனின்றிப் பரிதாபமாகச் செத்தார்; அவருக்கு வயது 35; திருமணமானவர்.

"அவருடைய குடும்பத்திற்கு ரூ. 1000 உதவிப் பணம் கொடுக்கப்படும்" என்று தென் மத்திய இரயில்வே அதிகாரி அறிவித்துள்ளார்.

அவருடைய மனைவிக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்படுமென்று இரயில்வே துறை அறிவித்துள்ளது.

சேக் அப்துல் ரகிமானின் இறுதிச் சடங்குகளுக்காக, உடனடியாக ரூ. 400 வழங்கப்பட்டது.

இரயில்வே பெண் தொழிலாளர்கள் சங்க சார்பில் ரூ. 150 வழங்கப்படுகிறது.

ஆந்திரத்தின் தலைநகரான ஐதராபாத்தில், முல்கி சட்ட ஆதரவாளர்கள் (தெலுங்கானாக்காரர்கள்) நேற்று பெரிய கலவரத்தில் ஈடுபட்டார்கள்; தீ வைப்பு, கல்வீச்சு — கொள்ளையடித்தல் போன்ற வன்முறைகளில் அவர்கள் ஈடுபட்டனர்; சாலைகளில் மரங்களை வெட்டிப் போட்டும் - பீப்பாய்களை உருட்டியும் — போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கப் போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்தனர்; அப்படியும் கூட்டம் கலையாததால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதில் ஒருவர் மாண்டார்; 13 பேர் படுகாயமடைந்தனர்; இவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

ஜி. டி. எக்ஸ்பிரஸ் தாக்கப்பட்டது

கிராண்ட் டிராங்க் எக்ஸ்பிரஸ் இரயில் மீது கற்கள் வீசப்பட்டதால் ஏர்கண்டிஷன் பெட்டிகளின் கண்ணாடிக் கதவுகள் உடைந்துவிட்டன; இதன் விளைவாக சுமார் ரூ. 34,000 சேதம் ஏற்பட்டிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

கண்ணாடிக் கதவுகள் உடைந்துவிட்டதால் ஏர்கண்டிஷன் முறை செயல்பட முடியாது; எனவே, இன்னும் சில தினங்களுக்கு ஜி. டி. எக்ஸ்பிரஸ் வண்டியில் ஏர்கண்டிஷன் பெட்டிகள் இராது.

'ஆந்திரத்தைப் பிரிக்க முடியாது'

'மாற்று வழிபற்றி மத்திய அரசு முடிவு செய்யும்'

நாடாளுமன்றத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அறிவிப்பு

புதுடில்லி நவ 24—

"ஆந்திரத்தில் தற்போது நடைபெறுவது, அந்த மாநிலத்தை மட்டும் பாதிக்கக்கூடியது அல்ல—நாடு முழுவதையும் பாதிக்கக்கூடிய பெரிய பிரச்சினையாகும்; எனவே, அனைத்துக் கட்சிகளும் இதைத் தேசிய பிரச்சினையாகக் கருதி, தீர்வுகாண ஒத்துழைக்க வேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி மக்கள்சபையில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்; அவர் மேலும் பேசியதாவது:—

"இந்தப் பிரச்சினை தீர, ஆந்திரத்திலிருந்து தெலுங்கானாவைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது; இதை மத்திய அரசு ஏற்காது.

இந்த மாதிரி பிரிவினையால் இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்கு மட்டும் அல்ல—ஆந்திர மாநிலத்துக்கும் தீங்கு ஏற்படும்.

'பிரிவினை' என்ற சொல்லை உறுப்பினர்கள் இவ்வளவு தாராளமாகப் பயன்படுத்த வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு ஒரு நல்ல முடிவுக்கு வரும்; எப்படிப்பட்ட முடிவை எடுத்தாலும், ஆந்திரத்தில் உள்ள எல்லோருக்கும் திருப்தி ஏற்பட்டு விடாது; ஒரு பகுதியினருக்குப் பிடித்தால், இன்னொரு பகுதியினருக்குப் பிடிக்காது.

என்றாலும், மத்திய அரசு எந்த முடிவை எடுத்தாலும் அதை நிறைவேற்றுவதாக ஆந்திர அரசு என்னிடம் தெரிவித்திருக்கிறது.

ஆந்திரத்தில் நடைபெறும் வன்முறைகளுக்கும், துப்பாக்கிச் சூட்டில் ஏற்படும் உயிர் பலிக்கும் நான் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது துரதிருஷ்டவசமானது; இரயில்வே துறையின் சேவை நாட்டுக்கு மிகவும் தேவைப்படுகிறது; இந்த நிலையில்—பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த சூழ்நிலையில் இரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது விரும்பத்தக்கது அல்ல.

வன்முறையால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காது என்பதை மக்கள் உணர வேண்டும்."

முல்கி சட்டம்

ஐதராபாத் சமஸ்தானம், நிஜாம் மன்னரின் ஆட்சியில் இருந்தபோது, ஒரு சட்டம் நடைமுறையில் இருந்தது; 'சமஸ்தானத்தில் 15 ஆண்டு வசிப்பவர்களுக்குத்தான் அரசாங்க வேலை கொடுக்

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களவை தி. மு. க. குழுத் தலைவர்

இரா. செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டார்

புதுடில்லி, நவ. 23—

நாடாளுமன்ற மக்களவையின் தி. மு. க. குழுத் தலைவராகத் திரு. இரா. செழியன் இன்று இங்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாடாளுமன்ற மேலவை—மக்களவை [illegible] இரு அவைகளுக்கும் [illegible]வான கட்சித் தலைவராகவும் அவர் நீடிப்பார்.

தமிழக நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இத்தேர்தலை நடத்திவைத்தார்.

நெல்லை சம்பவம்

நீதி விசாரணைக்கு அரசு ஆணை

சென்னை, நவ. 23—

நெல்லையில் மாணவர் ஒருவர் இறக்க நேர்ந்தது பற்றி ஆராய நீதி விசாரணைக்குத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அரசு செய்தித் துறை வெளியீட்டில் கூறப்பட்டிருப்பதாவது:—

"கடந்த 21-11-72 அன்று திருநெல்வேலியில் மாணவர் ஒருவர் இறந்துபோனது தொடர்பாக மாவட்ட நீதிபதி அளவில் நீதி விசாரணை நடத்திடத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கடந்த செவ்வாயன்று, நெல்லை நகரில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட மாணவர் கூட்டம் ஒன்றைப் போலீசார் விரட்டியபோது, ஒரு மாணவர் தாமிரபரணி ஆற்றில் மூழ்கி விட்டார்; இந்த மாணவர் மரணம் குறித்தே அரசு தற்போது நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

போலீசார் மீது வழக்கும் பதிவு

சென்னை, நவ. 23—

"பாளையங்கோட்டையில் கடந்த 19-ந் தேதி கல்லூரிப் பேராசிரியர் ஒருவரை அடித்ததாகக் கூறப்படும் போலீசார் சிலர்மீது கிரிமினல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று மாநிலப் போலீசுத் துறைத் தலைவர், பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

மாணவர் சமுதாயத்திற்கு முதலமைச்சர் கலைஞர் உருக்கமிகு வேண்டுகோள்

'எதிர்கால நல்வாழ்வுக்கு உரிமையைப் பயன்படுத்துவீர்'

'குறுகிய நோக்கம் கழக அரசுக்கு இல்லை--- உணர்வுகளை வேறுபடுத்தும் எண்ணமும் இல்லை'

'எளிதான முறையில் எந்தப் பிரச்சினையையும் அணுகுங்கள் -- வேறு முறைகளை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? --- சிந்திப்பீர் --- செயல்படுவீர்'

சென்னை, நவ. 24—

"மாணவ மணிகளே -- நீங்கள் எந்த அரசியல் கட்சியில் உங்கள் உணர்வுகளை ஒப்படைத்துக் கொண்டிருந்தாலும், நான் அதற்காக உங்களை வேறுபடுத்திப் பார்க்க விரும்பவில்லை! இந்த அரசு அப்படிப்பட்ட குறுகிய நோக்குடன் உங்கள் பிரச்சினைகளை அணுகவில்லை.

"எந்த அரசியல் கொள்கைக்கு உங்கள் இதயத்தில் இடமளிக்கவும் உங்களுக்கு உரிமை உண்டு; ஆனால் அந்த உரிமையை உங்கள் எதிர்கால வாழ்வின் நலலொளிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பயன்படுத்திப் படிப்பைப் பாழாக்கிக்கொள்ள வேண்டாமென்று -- உங்கள் சகோதரன் என்ற முறையில் -- கேட்டுக்கொள்கிறேன்.

"அரசியல் காரணங்களுக்காக என்னையோ -- கழக அரசையோ தாக்கிட -- கண்டித்திட உங்களுக்கு அரசியல் மேடைகள் இல்லாமல் இல்லை! பொதுவான மாணவர் சமுதாயத்தின் எதிர்காலம், வன்முறைச் செயல்களால் பாதிக்கப்படாமல் உங்களை, நீங்களே கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

"ஒவ்வொரு கல்லூரியிலும் -- கல்விக்கூடத்திலும் யூனியன் வைத்திருக்கிறீர்கள்! எந்தப் பிரச்சினையானாலும் அதன் தலைவர்களும் -- நிர்வாகிகளும் பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமே! அந்தச் சுலபமான முறையை அணுகாமல் எதற்காக வேறு முறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் -- சிந்தனை செய்யுங்கள்.

"இந்த என் வேண்டுகோளைக்கூட உங்களில் சிலரோ -- பலரோ கேலி செய்யக்கூடும்; அதனையும் நான் அறிவேன்; ஆயினும், என் உணர்ச்சிகளை உங்களுக்குச் சமர்ப்பிக்க என் இதயம் துடித்தது.

"மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் -- என் வேண்டுகோளை ஏற்றுக் கல்வி நலம் பேண முனையுங்கள்! உங்கள் தொடர்புடைய பிரச்சினை எதுவாயினும் அவற்றைப் பேசித் தீர்த்திட இந்த அரசு தயாராக இருக்கிறது"

—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாணவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்; இதன் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

கருத்து வேறுபாட்டுக்கு இடமிருந்ததா -- மாணவர் சமுதாயம் இதனை மறப்பதா?

"தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற எல்லாக் கிளர்ச்சிகளிலும் மாணவ நண்பர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்ற ஓர் சூழ்நிலை உருவாகி இருப்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

மாணவர்கள், தங்களோடு தொடர்புடைய -- தங்கள் கல்வி வளர்ச்சியில் தொடர்புடைய பிரச்சினைகளில் தங்கள் குரலை எதிரொலிப்பதிலும், உள்ளத்தைப் பிரதிபலிப்பதிலும் எனக்கு கருத்து வேறுபாடு ஏதும் கிடையாது.

தங்கியிருக்கும் உணவு விடுதிகளுக்குத் தேவையான வசதிகள் -- கல்லூரிக்குத் தேவையான பேருந்து வண்டிகள் -- இதுபோன்ற எத்தனையோ கோரிக்கைகள் எழுப்பப்பட்டபோது அவைகள் நிறைவேற்றப்பட்டும் இருக்கின்றன.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், 1965-லும் சரி -- 1968-லும் சரி -- மாணவர்கள் ஈடுபட்டபோது, அண்ணா அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த 1965-லும், முதலமைச்சராக இருந்த 1968-லும் 'மொழிக் கிளர்ச்சியில் மாணவர்கள், பிரச்சினையைப் பெரியவர்களிடம் விட்டுவிட்டுத் தங்கள் படிப்பில் நாட்டம் செலுத்த வேண்டும் -- வன்முறையில் கடுகளவும் ஈடுபடக் கூடாது' என்று ஒரேவிதமான கருத்தைத்தான் வெளியிட்டார்.

'தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்திக்கு இடமில்லை' என்று தி. மு. க. ஆட்சி முடிவு கட்டியதையும் மாணவர் சமுதாயம் அறியாமல் இல்லை!

'ஐந்தாண்டுக்குள் தமிழை மாநிலம் முழுவதும் பயிற்று மொழியாக்குவோம்' என்று அண்ணா அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தும்கூட, அண்ணா அவர்களுக்குப் பிறகு அந்த முயற்சியில் நாங்கள் இறங்கியபோது மாணவர்கள் சமுதாயம், பயிற்றுமொழி பற்றிய கிளர்ச்சியில் இறங்கியது; அதில் இந்த அரசாங்கம் பிடிவாதம் காட்டாமல் -- அனைத்துக் கட்சியினரின் கருத்தையும் அறிந்து -- மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஒரு குழுவை நியமித்து -- அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டதை மாணவர்கள் மறந்திருக்க முடியாது.

இதுபோன்ற மாணவர்களின் கல்வித் தொடர்புடைய எல்லாப் பிரச்சினைகளையும் இந்த அரசு பரிவுடன் கவனித்து நிறைவேற்றி வருகிறது.

அடித்தளத்து மக்களுக்கு ஆற்றிய நற்பணிகள்

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் அரசுத்துறை --- தனியார் துறைகளில் எண்பத்துநான்கு கலைக் கல்லூரிகள் இந்த அரசின் முயற்சியால் புதிதாகத் தோன்றியுள்ளன.

பி. யு. சி. வரையில் இலவசக் கல்வி நீடிக்கப்பட 1970-ல் இந்த அரசு வழிவகுத்தது.

பிற்பட்ட சமுதாய மாணவர்கள் கல்விச் சலுகை பெற அவர்கள் வாங்க வேண்டிய 'மார்க்' விகிதத்தைக் குறைத்து -- அதன் காரணமாக ஏராளமான மாணவர்கள் பயன்பெற வழிசெய்துள்ளது இந்த அரசு.

அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பு -- கல்லூரி 'அட்மிஷன்' ஆகியவற்றில் 16 சதவிகிதம் என்றிருந்ததை 18 சதவிகிதம் என்று உயர்த்தியும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவிகிதம் என்றிருந்ததை 31 சதவிகிதம் என்று உயர்த்தியும், — அடித்தளத்து மக்களுக்காக ஆற்ற வேண்டிய நற்பணியை ஆற்றியது இந்த அரசு!

1966-ம் ஆண்டில் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை தொண்ணூறாயிரம் என்று இருந்ததற்கு மாறாக, 1971—72-ல் 1,90,000 மாணவர்கள் என்ற அளவுக்கு உயர்ந்திருப்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட முடியும்.

அண்ணா காட்டிய அறவழியை மறப்பதா?

இவ்வளவுக்கும் பிறகு, மாணவ நண்பர்களில் ஒரு பகுதியினர், இந்த ஆட்சிக்கு விரோதமாகத் தூண்டிவிடப்படுகின்றனர் என்பதை எண்ணும்போது நான் மிக வேதனையடைகிறேன்.

என்னைப் பொறுத்தவரையிலும் -- தி. மு. கழகத்தின் இன்றைய அமைச்சர்களை [illegible]ரையிலும், பலரது பொதுவாழ்க்கை -- அரசியல் [illegible] -- மாணவப் பருவத்திலேயே ஆரம்பமானது என்றாலும், இன்று சில இடங்களில் நடைபெறும் வன்முறை சம்பவங்கள் போன்ற முறைகளை நாங்கள் எங்கள் மாணவப் பருவத்தில் ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர்!

எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், எந்த ஒரு போராட்டமாயினும் முறையாக அறிவித்து -- 'யார் தலைமையில் யார் யார் ஈடுபடுவார்கள்' என்று வகைப்படுத்தி -- அந்தப் போராட்டங்களை அறவழியில்தான் நடத்திக்காட்டியுள்ளார்; அதுதான் அண்ணா வழியாகும்.

1965-ல் மொழிப் போர் நடந்தபோது, அப்போதிருந்த ஆளும் கட்சிக்குத் தொல்லை தர அவர் விரும்பாமல், அந்தப் போரில் நடைபெற்ற வன்முறைகளைக் கண்டித்து ஒவ்வொரு நாளும் கடுமையான அறிக்கைகளை அண்ணா அவர்கள் விடுத்தார்கள்.

அன்றும் அவர்கள் தூண்டிவிடவில்லையா?

1968-ல் மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது, பொதுப்பணி அமைச்சராக இருந்த நான்தான் பெரம்பூரிலும், சென்ட்ரல் இரயில் நிலையத்திலும் கூடியிருந்த மாணவர்கள் மத்தியில் நுழைந்து வேண்டுகோள் விடுத்துக் கலைந்து போகுமாறு செய்தேன்.

அண்ணா முதல்வராக இருந்தபோது, சென்னையில் பஸ் தொழிலாளர்களுக்கும் -- மாணவர்களுக்கும் ஏற்பட்ட மோதலில், ஒரு மாணவர் விடுதியின் மீது படையெடுத்த பஸ் தொழிலாளர்களை இரவு மூன்று மணி வரையில் அந்த விடுதியின் வாசலில் நின்று தடுத்து நிறுத்தி -- ஆத்திரமடைந்திருந்த அந்தப் பெருங் கூட்டத்தினரின் பழிவாங்கும் உணர்ச்சியிலிருந்து மாணவர்களைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொண்டேன்; அப்பொழுதும் பேச்சுக்கள் திரித்துக் கூறப்பட்டு, மாணவர்களை என் மீதும் -- அறிஞர் அண்ணா அவர்கள் மீதும் தாக்குதல் நடத்த சிலர் தூண்டிவிட்டார்கள்.

உண்மையை உணராதவரல்லர் நாங்கள்

அண்மையில் நடைபெற்றுள்ள சில சம்பவங்களைப் பார்ப்போம்; மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குச் சிறிதும் தொடர்பில்லாத சில கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபட நேரிட்டது வேதனைக்குரியதாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எனக்கு 'டாக்டர்' பட்டம் கொடுத்தது மாணவர்களில் ஒரு பகுதியினருக்குப் பிடிக்கவில்லை; நான் அதற்கு தகுதியில்லாதவன் என்றால், அதனை மாணவர்கள் கூட்டங்களில் பேசும்போதோ -- ஏடுகளில் எழுதும்போதோ கேலி செய்துவிட்டுப் போயிருக்கலாம்.

வாழ்த்துக்களை மட்டுமே பொதுவாழ்வில் யாரும் பெற்று வளர முடியாது; வசைவுகளைத் தாங்கிக்கொள்ளவும் உள்ளம் பக்குவமாக இருக்கவேண்டும் என்ற உண்மையை உணராதவன் அல்லன் நான்; ஆனால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அசம்பாவிதங்கள் நடைபெறுகின்ற அளவுக்கு அந்த 'டாக்டர்' பட்டத்தை எதிர்த்து ஒரு கிளர்ச்சியே நடைபெற்றுவிட்டது.

விவசாயிகள் போராட்டத்திலும் மாணவர்களில் ஒரு பகுதியினர் ஈடுபட்டனர் என்றால் -- அண்ணா சொன்னதுபோல -- பெரியவர்கள் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளில் அதனையும் ஒன்றாகக் கருதி, மாணவர் சமுதாயம் தன் கல்வியில் நாட்டம் செலுத்தியிருக்கலாம் அல்லவா?

எதிர்க்கட்சி தகராறில் இந்த நிலை ஏற்பட்டதேன்?

கண்ணமங்கலத்தில் கழகக் கூட்டத்தில் கலவரம் -- போலீசு நிலையம் முற்றுகை -- அதில் ஒரு மாணவ நண்பர் பலியாகிறார்; அந்த இளம் பிள்ளை -- காங்கிரசுக்காரர் வீட்டுச் செல்வன் என்று கேள்வி; உட்கட்சித் தகராறு -- அதில் அந்த மாணவத் தளிரின் உயிர் போகக் காரணம் என்ன? யோசித்துப் பார்க்க வேண்டாமா?

போடியில் ஏற்பட்ட பதட்ட நிலைக்குப் பின்னால்...

போடியில் சட்டமன்ற உறுப்பினர் சுருளிவேல், கழகக் கொடிகளை வெட்டியவர்களைக் கண்டித்துப் பேசினார்; அதில் சில காரசாரமான வார்த்தைகள்; அந்த வார்த்தைகள் கழகக் கொடிகளை வெட்டியவர்களை எதிர்த்துத்தான் கூறப்பட்டன -- மாணவர்கள் யாரையும் குறித்து அல்ல; ஆயினும், மாணவர்கள் மறுப்புத் தெரிவித்தனர்; தான் பேசியதற்கு விளக்கம் தெரிவித்து -- தவறாக யாராவது கருதினால் அதற்காக வருந்துவதாகவும் போடி சட்டமன்ற உறுப்பினர் தண்டு அறிக்கையே வெளியிட்டு விநியோகித்துள்ளார்.

ஆயினும், அங்கே அமளி தொடர்கிறது—'சென்னைக்குச் சென்றுள்ள மாணவர் தலைவர்கள் வந்த பிறகுதான் நாங்கள் முடிவு சொல்லமுடியும்' என்று அங்குள்ள மாணவர்கள் அதிகாரிகளிடம் கூறுகிறார்கள்; சென்னைக்கு வந்த மாணவர்கள் யாரைச் சந்தித்தார்கள் என்று புரிகிறது; திரும்பிச் செல்லுகிறார்கள்; போடியில் போலீசு நிலையத்துக்குத் தீ வைக்க முனைகிறார்கள்; பதட்ட சூழ்நிலை அங்கே ஏற்படுகிறது.

கேலியினால் ஏற்பட்ட விபரீத நிலை

பாளையங்கோட்டையில் நடந்தது என்ன?—இரு மாணவர்கள் அணிந்து சென்ற உடை பற்றி ஒரு புரொபசர் கேலி பேசினார்; அந்த மாணவர்கள், போலீசு அதிகாரி வீட்டுப் பிள்ளைகளாம்; அவர்கள் புகாரின் பேரில், புரொபசர் போலீசாரால் தாக்கப்பட்டிருக்கிறார்; புரொபசரைத் தாக்கிய போலீசு அதிகாரியின் போக்கு வன்மையான கண்டனத்துக்கு உரியது: அந்த அதிகாரியின் அதிகார வரம்பு அனைத்தையும் கடந்தது.

சம்பந்தப்பட்ட போலீசு அதிகாரிகள் யாராக இருந்தாலும் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் மாநிலத் தலைமைப் போலீசு அதிகாரியிடம் கூறினேன்; அதற்கேற்ப அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுத்து -- முதற்கட்டமாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுவிட்டார்கள். அவர்கள் மீது விசாரணை தொடரும்.

இந்த அமளி ஆரம்பமானதே மாணவர்களின் உடைகளைக் கேலி செய்ததன் காரணமாகத்தான்; ஆனால் நிலைமை எங்கே போய் முடிந்தது -- மாணவர் ஊர்வலமாகச் சென்று கலெக்டருடன் பேசினர்; அதற்கிடையே பஸ்களின் மீது கல் வீச்சு -- போலீசார் தடையிடு -- ஒரு மாணவ நண்பர், ஓடும்போது ஆற்றில் விழுந்து உயிரிழந்தார்.

மாணவர்களுக்காகவே இன்னல்களை ஏற்றேன்

அந்த மாணவ நண்பரின் இன்னுயிர் போனதற்காக நான் இரத்தக் கண்ணீர் வடிப்பவன் என்பதை என்னை உணர்ந்த சில மாணவ நண்பர்களாவது நிச்சயம் அறிவார்கள்.

பாதுகாப்புச் சட்டம் என்னைத் தாக்கியதும் -- நானூறு மைல் தூரம் லாரியில் ஏற்றிச் செல்லப்பட்டதும் -- பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் கிடந்ததும் மாணவர்களுக்காகத்தான் என்பதை நான் இன்னும் பெருமையாக எண்ணிக்கொண்டிருப்பவன்!"

ஆசிரியருக்கு மடல்

கழகத்தைப் பிளக்க முயன்ற ஆச்சாரியாரின் கருவி

சிங்கத்தை இடறியவர் நிலைக்குச் சிறு நரிக் கூட்டம் ஆளாகப்போவது உறுதி

ஐயா,

நமது கழகத்தைப் பிளக்க வேண்டும் என்பதற்காகவே இராசகோபாலாச்சாரியாரால் உருவாக்கி விடப்பட்ட ஒரு மனிதர், சென்னை லாயிட்ஸ் சாலையில் இருந்து வருகிறார்; இவர் இன்று நேற்றல்ல -- கடந்த பல ஆண்டுகளாகவே கழகத்தை எந்த வகையில் பிளந்து -- அதன் வலிவைக் குறைக்க முடியுமோ அந்த வகையிலெல்லாம் முயற்சி செய்து வந்திருக்கிறார்!

முன்பு சம்பத் கழகத்திலிருந்து பிரிவதற்குப் பின்னணியிலிருந்து வேலை செய்தவரும் இந்த மனிதர்தான்; இப்போது நடிகர் இராமச்சந்திரனைக் கழகத்திலிருந்து பிரிப்பதற்கு மூலகாரணமாக இருந்துவருபவரும் அதே லாயிட்ஸ் ரோடு நபர்தான் என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது.

சம்பத் விலகுவதற்குமுன் அறிக்கை தயாரித்து—'சைக்ளோஸ்டைல்' செய்து அனுப்பும் வேலை முதல் எல்லாப் பணிகளும் அந்த லாயிட்ஸ் ரோடு நபரின் வீட்டில்தான் நடைபெற்றன; இப்போது எம். ஜி. இராமச்சந்திரனுக்கு 'இரவல் மூளை'யாகி இயங்குபவரும் அதே லாயிட்ஸ் ரோடு நபர்தான!

இந்த லாயிட்ஸ் ரோடு நபர் கொஞ்சகாலம் தி. மு. கழகத்திற்குள்ளேயே ஊடுருவி -- தலைவர்களுடன் நெருங்கியிருந்து -- தனது முயற்சி பலிக்காததால் ஒதுங்கிக் கொண்டார்; சம்பத்தைப் பிரித்ததோடு 'ஆத்ம திருப்தி' கொண்டு, அரசியலுக்கே முழுக்குப் போட்டுவிட்டதாகக் கூறி -- காங்கிரசுக் கட்சிக்கு நல்ல பிள்ளையாகி விட்டார்!

பக்தவத்சலத்துக்கு வழக்கறிஞர் வேலை செய்ததால் அரசாங்கப் பதவியும் அவருக்குக் கிட்டியது; பின்னர் கழக ஆட்சி வந்ததும் பதவியும் பறிபோயிற்று; தனது பழைய வேலையைத் தொடங்கலானார்!

அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரையில், 'சட்ட ஆலோசகர்' (லீகல் அட்வைசர்) என்ற பெயரில் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு ஆத்ம நண்பராகவும் -- பக்கத்து வீட்டுக்காரராகவும் இருந்து வந்திருக்கும் திருவாளர் வி. பி. இராமன் என்பவர்தான் நான் குறிப்பிட்டுள்ள லாயிட்ஸ்ரோடு நபர்; அவர், ஆச்சாரியாரின் குடும்ப நண்பரின் மகன் என்பதும், ஆச்சாரியாரின் அன்புக்குரிய 'செல்லம் பிள்ளை' என்பதும் ஊரறிந்த செய்திதான்!

எனவே, ஆச்சாரியார் நமது கழகத்தின் செல்வாக்கைச் சொந்தக் கட்சிக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான் நம்மோடு கூட்டுச் சேர்ந்தாரேயன்றி, நல்லெண்ணத்தின் அடிப்படையிலோ -- நட்புணர்ச்சியின் காரணமாகவோ அல்ல என்பது நன்கு புலப்படுகிறது.

தேர்தல் இலாபம் கருதி ஒருபுறத்தில் கழகத்தோடு கூட்டுச் சேர்ந்த போதிலும், மற்றொரு புறத்தில் கழகத்தை உடைக்கவும் அவர் மறைமுகமாக வேலை செய்துகொண்டு இருந்திருக்கிறார் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

இப்போது, எம். ஜி. இராமச்சந்திரன்—கே. ஏ. மதியழகன் கூட்டாளிகள் சார்பில் வாதாடும் வழக்கறிஞரும் அதே வி. பி. இராமன் என்கின்ற பத்திரிகைச் செய்தி, நான் மேலே குறிப்பிட்ட உண்மையை உறுதிப்படுத்தும் என்று நம்புகிறேன்.

'கழகத்தைப் பிளந்து விட்டோம்' என்று ஆச்சாரியாரும் -- அவரால் ஏவிவிடப்பட்ட ஆயுதமும் வெற்றிச் சிரிப்புச் சிரிக்கலாம்; ஆனால், கழகம் எந்தவிதப் பாதிப்புக்கும் ஆளாகிவிடவில்லை; மாறாக, இடறப்பட்ட சிங்கம் போல் எழுந்து நிற்கிறது! சிங்கத்தை இடறியவர் நிலைக்கு சிறு நரிக் கூட்டம் ஆளாகப்போவது உறுதி!

சேங்கதிரோன்
சென்னை—14.

அரசியல்வாதிகளுக்குப் புரியும் -- 'அரை வேக்காடு'களுக்கு எப்படிப் புரியும்?

ஐயா,

தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்குச் சென்று -- பதவியை இராஜினாமா செய்யச் சொல்லி மனுக் கொடுக்கப் போகிறார்களாம் -- புதுக் கட்சிக்காரர்கள்!

தேர்தல் நேரத்தில் கூட்டணியில் இருந்த இந்திரா காங்கிரசும் -- வலது கம்யூனிஸ்டுக் கட்சியும் இப்போது கூட்டணியிலிருந்து விலகிவிட்டதால், அந்தக் கட்சிகளின் துணையோடு வெற்றி பெற்ற கழக எம்.எல்.ஏ.-க்கள் தங்கள் பதவியை இராஜினாமா செய்துவிட வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருக்குமாம்.

கழகக் கூட்டணியிலிருந்த அந்த இரு கட்சிகள்தான் விலகிவிட்டனவே தவிர, வாக்களித்த மக்கள் யாரும், கழகத்துக்குத் தாங்கள் வழங்கிய ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லை; அவர்களால் இப்போது திருப்பப் பெற்றுக்கொள்ளவும் இயலாது.

ஒருமுறை தேர்தலில் வாக்களித்துவிட்டால், அடுத்து ஐந்தாண்டு கழித்துப் புதிய தேர்தல் வருகின்ற வரையில் அந்த வாக்குக்கு மதிப்பு உண்டு; இடையிலே அந்த வாக்கினை யாராலும் திரும்பப் பெற முடியாது; இதுதான் அரசியல் சட்டம்.

வாக்களித்தவர்களே தங்கள் வாக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டதாக அறிவித்தாலும் அது செல்லாது; சட்டத்தில் அதற்கு இடமில்லை.

தொகுதி மக்களின் ஆதரவை தி. மு. கழக எம்.எல்,ஏ.-க்கள் அனைவரும் இழந்துவிட்டார்கள் என்று யாரோ சிலர் சொல்லிவிட்டதாலேயே, இராஜினாமா செய்துவிட வேண்டும் என்பதில்லை.

தொகுதி மக்கள் தங்கள் பிரதிநிதியைத் திருப்பப் பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய சட்டமியற்றினாலன்றி, எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரையும் -- தொகுதி மக்கள் அத்தனைப் பேரும் ஏகமனதாக விரும்பினாலும் கூட—பதவி இழக்கச் செய்துவிட முடியாது.

இது, அரசியல்வாதிகளுக்குப் புரியும் -- அரை வேக்காடுகளுக்கு எப்படி புரியும்?

தி. மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் லீக் -- பார்வர்டு பிளாக் -- திராவிடர் கழகம் -- தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகளெல்லாம் இன்னும் தி. மு. க. கூட்டணியில்தான் உள்ளன!

தமிழ்நாட்டில் எந்த ஒரு தொகுதியிலும் தனித்து நின்று வெற்றி பெறச் சக்தியற்ற வலது கம்யூனிஸ்டுக் கட்சியும், தொண்டர்களே இல்லாத இந்திரா கட்சியும் விலகிக் கொண்டதாலேயே தி. மு. கழகம் தொகுதி மக்கள் ஆதரவை இழந்துவிட்டதாகச் சொல்லிவிட முடியுமா?

அப்படியானால், தி. மு. கழகத்தின் ஆதரவில் வெற்றி பெற்ற வலது கம்யூனிஸ்டு -- இந்திரா கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகிவிட வேண்டியதுதானே நியாயம்?

அதே 26-ம் தேதி, இந்திரா கட்சி -- வலது கம்யூனிஸ்டுக் கட்சி எம்.எல்.ஏ.-க்கள் வீட்டுக்குத் தி. மு. கழகமும் -- தோழமைக் கட்சிகளும் சேர்ந்து வாக்காளர் பேரணி நடத்திச் சென்று இராஜினாமா செய்யக் கோரலாமா?

தி. மு. கழகத்தின் சார்பில் நின்று வெற்றி பெற்ற எம். ஜி. இராமச்சந்திரனும் -- அவருடைய சகாக்களும் முதலில் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்வார்களா?

மானஸ்தராக இருந்தால் -- மனச்சாட்சி என்று ஒன்று உள்ளவராக இருந்தால் -- நாணயமுள்ளவராக இருந்தால் -- எம். ஜி. இராமச்சந்திரன் இதை முதலில் செய்துவிட்டுப் பிறகு வாக்காளர் பேரணி நடத்தட்டும்!

புலவர் கே. இனியன்
சென்னை—13

நன்றி மறந்தவரின் செயலை நாட்டு மக்கள் மன்னிப்பரா?

ஐயா,

கழகத்திலிருந்து கடைசியாக விலகிச் சென்றுள்ள நாஞ்சில் மனோகரனும், கழகத்தை பற்றி ஊழல் -- ஊழல் என்று ஊளையிட ஆரம்பித்திருக்கிறார்!

இன்னும் கொஞ்சநாள் கழகத்திலேயே இருந்திருந்தால், அவர் புரிந்துள்ள ஊழல்களுக்காக அவர்மீது கழகம் நடவடிக்கை எடுத்து வெளியேற்றிவிடும் என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டுதான் அவர், முன்னதாகவே ஓடிவிட்டார் என்பது -- என்போன்ற வடசென்னைவாசிகளுக்குப் புரியும்.

அறிஞர் அண்ணா காலத்திலேயே அவர்மீது நடவடிக்கை எடுத்து வெளியேற்றும்படி தென்சென்னைக் கழகத் தோழர்கள் அண்ணாவிடம் முறையிட்டுக் கொண்டதன் விளைவுதான், அவர் தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து விரட்டப்பட்டது; அண்ணாவின் பெருந்தன்மை காரணமாகவே அவருக்குத் தொடர்ந்து கழகத்தில் இடமளிக்கப்பட்டது.

வடசென்னையிலும் அவனுக்கு 1971 தேர்தலில் சீட்டுக்கிழிக்கப்பட்டிருக்கும்; அவரை வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று ஆய்வுக் குழுவில் சிபாரிசு செய்வதற்கே ஆள் இல்லை; ஊழியர்கள் கூட்டத்தில்கூட, அவர் எப்படிப்பட்ட கண்டனக் கணைகளையெல்லாம் சந்திக்க நேர்ந்தது என்பது அவருக்கே தெரியும்; 'நான் செய்ததெல்லாம் தவறுதான் -- வருந்துகிறேன் -- இனி ஒழுங்காக நடந்துகொள்வேன்' என்று கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் அவர் கெஞ்சியதை இன்னும் யாரும் மற[ந்து]விடவில்லை!

கழகத் தலைவர் கலைஞரின் க[ருணை]யினால்தான் அவர் தொ[ட]ர்ந்து வடசென்னைத் தொகுதி நாடாளு[ம]ன்ற உறுப்பினராகவும் -- கழக முன்னணித் தோழர்களில் ஒ[ருவ]ராகவும் நேற்றுவரை 'ஜொலி'த்துக் கொண்டிருக்க முடிந்தது!

அவருடைய ஊழல்களும் -- ஒழுக்கங்கெட்ட செயல்களும் சென்னையில் மட்டுமல்ல -- டில்லிப் [ப]ட்டணத்திலேயும் சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருப்பது அனைவரு[ம்] அறிந்ததுதான்! இந்தப் பெரிய மனிதர்தான் இப்போது கழக[த்]தைப் பற்றிப் பேசுகிறார்!

இந்த நாஞ்சிலாரின் நன்றி[கெ]ட்ட செயலைக்கூட கழகம் மன்னித்துவிடும்; ஆனால் அவர் நட[த்]தியிருக்கின்ற ஊழல் -- ஒழுங்கீனங்களை இந்தச் சமூகம் ஒருகாலும் [ம]ன்னிக்காது!

அவர் புரிந்திருக்கின்ற ஊழ[ல்] ஒன்று இரண்டா -- இந்தப் பத்தாண்டுக் காலத்தில்? பட்டியல் [வே]ண்டுமா? பத்திரிகையில் வெளியிடலாமா? மனோகரனே, [உ]மது எசமானர் புரட்சியாரோ எந்த நேரத்தில் விரும்பினாலும் [நா]ன் ஆதாரங்களுடன் பட்டியல் தரத் தயார் -- விசாரணைக்குத் [த]யார்தானா? யாரைக்கொண்டு எந்த இடத்தில் எப்போது விசாரணை செய்யலாம் என்பதை அறிவித்தால் பட்டியலை வெளியிடுவது ம[ட்]டுமல்லாமல் சாட்சியங்களுடன் நானே நேரில் வரவும் தயாராயிரு[க்]கிறேன்.

எஸ். இராமதாஸ்,
[செ]ன்னை 8-வது வட்ட தி.மு.க. செயலாளர்

கட்சிமாறிகள் இராஜினாமா செய்வார்களா?

ஐயா,

கட்சிமாறிய மதியழ[கன்] வீட்டுமுன்பும், மனோகரன் வீட்டுமுன்பும் ஏற்கனவே வாக்கா[ள]ர்கள் பேரணி நடத்தி பதவியை இராஜினாமா செய்யும்படிக் கோரியிருக்கின்றனர்; அந்தக் கோரிக்கையை ஏற்று அவர்கள் இருவரும் இராஜினாமா செய்ததாக இதுவரை தகவல் இல்லை.

இந்த இலட்சணத்தில் அந்த மகானுபாவர்கள்; கழக எம்.எல்.ஏ.-க்கள் பதவி விலகவேண்டும் என்று கோர 26-ந் தேதி கழக எம்.எல்.ஏ.-க்கள் வீட்டுமுன்பு பேரணி நடத்தப் போகிறார்களாம்; இவர்களை மக்கள் என்ன நினைப்பார்கள்?

கழகத்தின் தயவால் பதவியில் அமர்ந்த இவர்கள், முதலில் தங்கள் பதவியை இராஜினாமா செய்யட்டும்; அதன் பிறகு இவர்கள் ஆட்கள், கழக எம்.எல்.ஏ.-க்கள் வீட்டுக்குப் போகலாம்; செய்வார்களா?

ஆர். சிகுட்டினன்,
இராயபுரம், சென்னை-13.

வாக்காளரே இல்லாத வாக்காளர் பேரணியா?

தக்கபாடம் பெற்றுத் தீருவர்

ஐயா,

இம்மாதம் 26-ஆம் தேதி கழக எம்.எல்.ஏ.-க்கள் வீடுகளுக்கெல்லாம் ஊர்வலம் சென்று இராஜினாமா செய்யும்படி மனுக் கொடுக்கப் போகிறார்களாம் -- எம். ஜி. ஆர். கட்சிக்காரர்கள்! அண்டர் கிரவுண்டு கல்யாணசுந்தரம் கட்சியினரும் அவர்களுக்குத் துணையாக இருப்பார்களாம்!

இதற்கு, 'வாக்காளர் பேரணி' என்று பெயராம்! எந்த வாக்காளர்கள் இவர்கள் பின்னால் போகப்போகிறார்கள் என்பதையும் இருபத்தாறும் தேதி பார்க்கத்தான்போகிறோம்!

எம்.ஜி.ஆர். கட்சிக்காரர்களும் -- கல்யாணசுந்தரம் கட்சிக்காரர்களும்தான் வாக்காளர்களா? மற்றக் கட்சிக்காரர்களெல்லாம் வாக்காளர்கள் இல்லையா?

உள்ளபடியே வாக்காளர் பேரணி என்றால், அதில் எல்லாக் கட்சியினரும் இடம்பெற்றிருக்க வேண்டும்; இன்னும் சொல்லப்போனால், அந்தப் பேரவையில் தி. மு. கழகத்தவரும் -- தி. மு. க. தோழமைக் கட்சியினரும் பெரும் பான்மையினராகக் கலந்துகொள்ள வேண்டும்; அப்போதுதான், அந்தத் தொகுதி மக்கள் அனைவரின் கருத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கும்; அதைவிடுத்து, 'அண்டர் கிரவுண்டு' கட்சியினரும் -- அரை வேக்காட்டுக் கட்சியினரும் சேர்ந்துகொண்டு நடத்தப் போகும் கூத்துக்கு 'வாக்காளர் பேரணி' என்ற வர்ணப்பூச்சு ஏன்?

அந்தப் பேரணியில் செல்லுபவர்கள் அனைவரும் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்களாகவும், சென்ற தேர்தலில் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-க்கு ஓட்டுப் போட்டவர்களாகவும் இருக்கவேண்டும்; இப்படிப் பார்த்தால், நடக்கப்போகும் பேரணியில் எத்தனைப் பேர் தேறுவார்கள்?

ஓட்டுக் காங்கிரசுக் கட்சியினரால் வெளித் தொகுதியிலிருந்து கொண்டுவந்து அ[மர்]த்தப்பட்ட ஆட்களும் -- ஓட்டுப்போடும் வயதைக்கூட இன்னு[ம்] எட்டாதவர்களும் -- 'அண்டர் கிரவுண்டு' கட்சிக் குண்டர்களு[ம்] சேர்ந்துகொண்டு, எம்.எல்.ஏ. வீட்டின் முன் கூச்சல்போட்டு -- அ[ம]ளி துமளி ஏற்படுத்த முனைவார்களானால், உண்மையான தொகு[தி] வாக்காளர்கள் அவர்களுக்குத் தக்கபாடம் புகட்டத் தவறமாட்டா[ர்க]ள் என்பதை, 'நானும் ஒரு வாக்காளன்' என்ற முறையில் தெரிவி[த்]துக் கொள்கிறேன்.

கே. முத்துவேலு,
ஆவணிப்பூர்

ஊழல் மன்னரே -- விசாரணைக்குத் தயாரா?

ஐயா,

"தமிழக அரசுமீது சா[ட்]டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்க விசாரணைக் கமிஷன் அமைக்கப் போவதாக இந்திரா காந்தி அறிவித்துவிட்டால், தி. மு. கழகத்தில் இப்போதுள்ள எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் எல்லோ[ரு]ம் விலகி எம். ஜி. ஆர். கட்சிக்கு வந்து விடுவார்கள்" என்று எம்.[ஜி.] ஆர். கட்சிக்கு ஓடிப்போன மனோகரன் கூறியிருக்கிறார்!

இந்திரா காந்தி விசாரணைக் கமிஷன் அமைத்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்துதா[ன்] இந்த மனோகரனும் தி. மு. கழகத்தை விட்டு ஓடியிருக்கிறார் என்[ப]து இப்போது புரிகிறது!

விசாரணைக் கமிஷன் அமை[க்]கப்படுமா என்பது ஒருபுறமிருக்கட்டும்; அப்படி அமைக்கப்பட்டா[லு]ம், தி. மு. கழகத்தில் உள்ள எவருக்கும் அதைப்பற்றி அச்சமே -- நடுக்கமோ கிடையாது. விசாரணைக் கமிஷனுக்குப் பயப்பட வே[ண்]டியவர்களெல்லாம் [முன்]னமேயே எம்.ஜி ஆர். கட்சிக்கு ஓ[டிவி]ட்டார்கள்! அப்படி ஓடியவர்களில் கடைசி ஆள்தான் மனோகரன்!

"எம்.ஜி.ஆர். கட்சிக்கு ஓடிவிட்டதன்மூலம் தப்பித்துக்கொண்டு விட்டோம்" என்ற எண்ணத்தில்தான், மனோகரன் தைரியமாகப் பேசியிருக்கிறார் -- 'இந்திரா காந்தி விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும்' என்று!

விசாரணைக் கமிஷனைத் தாராளமாக அமைக்கட்டும்; தி. மு. கழக எம்.எல் ஏ.-க்கள், எம்.பி.-க்கள் தங்களை விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ளத் தயங்குபவர்கள் அல்லர்; அதேநேரத்தில், நேற்றுவரை தி. மு. கழகத்தில் இருந்துவிட்டு வெளியேறியிருக்கும் மனோகரன் கூட்டாளிகளும் விசாரணைக்கு உட்படத் தயாரா?

மு. இராமையா,
சென்னை 6-வது வட்ட தி.மு.க. செயலாளர்

ஒட்டுக் காங்கிரசுத் தலைவருக்கு ஓர் அறைகூவல்

செம்பரம்பாக்கம் ஏரி திட்டம் பற்றிக் கூறியதை நிரூபிக்க முடியுமா?

[★]

திட்டத்துக்கும் பல... எப்படி ஏற்பட்டது?

[★]

சட்டமன்ற உறுப்பினர் டி. இராசரத்தினம் வினா

பூவிருந்தவல்லி, நவ. 22—

பூவிருந்தவல்லிக்கு அருகிலுள்ள வேள்ளோடு கிராமத்தில் நடந்த தி. மு. க. போதுக்கூட்டத்தில் திருப்பெரும்புதூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் டி. இராசரத்தினம் அவர்கள் பேசுகையில் ஒட்டுக் காங்கிரசுத் தலைவருக்கு விடுத்த அறைகூவல் வருமாறு:—

"பூவிருந்தவல்லிக்கு அருகிலுள்ள செம்பரம்பாக்கம்ஏரி செங்கற்பட்டு மாவட்டத்திலேயே பெரிய ஏரி; இதை, கடந்த 25 ஆண்டுகளாக யாரும் மராமத்து வேலை செய்யாததால் பாழடைந்து -- தண்ணீர் வந்தாலும் போதிய காலத்திற்குத் தங்காமல் வீணாகப் போகிறது.

64 கிராமங்களிலிருக்கும் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக அந்த ஏரியை ரூ. 75 இலட்சம் செலவில் மராமத்துப் பணிகள் செய்யத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினால், ஏரியை ஆழப்படுத்தி -- கரைகளைப் பலப்படுத்தி -- பாசனக் கால்வாய்களைக் காங்கிரீட் மூலம் செய்து -- 25 சதவிகிதம் தண்ணீரை மிச்சப்படுத்தி -- விவசாயிகளுக்கு வசதி செய்கின்ற முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

ஏரியில் நீர் நிரம்பி வழியும்போது, பக்கத்தில் உள்ள நன்செய் நிலங்கள் பாழடைந்து போகாமல் இருக்கத் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவும், ஏரியைச் சுற்றி அழகிய பூங்கா அமைத்துப் படகு விட்டு உல்லாசப் பயணிகட்கு வேண்டிய இடமாக அமைக்கவும் அரசு திட்டம் தீட்டியுள்ளது.

இந்தத் திட்டத்தைப் பற்றிப் பழைய முதலமைச்சர் பக்தவத்சலம், 'விளக்கமாக அரசு இதை அறிவிக்க வேண்டும்' என்று கேட்டிருந்தார்; இதே செய்தியைப் பத்திரிகையில் திரித்து, செம்பரம்பாக்கம் ஏரியில் ரூ. 75 இலட்சம் ஊழல்' என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இதைப் பற்றி ஊழல் மன்னன் எம்.ஜி.ஆர்., எல்லாம் பத்திரிகைகளுக்கும் பேட்டி கொடுத்திருக்கிறார்; 'இந்தச் செம்பரம்பாக்கம் ஏரி ஊழல் ஒன்றே நான் கேட்கும் நீதி விசாரணைக்கு வலுவூட்டுவதாக இருக்கிறது; இந்த ரூ. 75 இலட்சம் திட்டத்தில் பயங்கர ஊழல் ஏற்பட்டுள்ளது' என்று அவர் சொல்லிப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

இத்திட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அலுவலகம், பூவிருந்தவல்லி ஊராட்சி மன்றக் கட்டடத்தில்தான் உள்ளது; இந்தத் திட்டத்தைக் கடந்த இரு மாதங்களுக்கு முன்புதான் கலைஞர் துவக்கி வைத்தார்; திட்டம் தீட்டி, 'இவ்வளவு ரூபாய்ச் செலவாகும்' என்று அதிகாரிகளால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது' பணம் இதுவரை ஒதுக்கப்படவில்லை.

பெயரளவில்தான் திட்டம் தொடங்கப்பட்டதே தவிர, இன்னும் செயலாற்றவில்லை; எந்தவிதமான காண்டிராக்டும் விடவில்லை; இதற்குள், இதில் பயங்கர ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்றும், இது ஒன்றே தாம் சொல்லிவரும் குற்றச்சாட்டுக்களுக்கு வலுமிக்க சான்றாக இருப்பதாகவும் எம்.ஜி.ஆர். கூறிவருகிறார்; இவர் சொல்லிவருகின்ற ஊழல் குற்றச்சாட்டுக்கள் எல்லாமே இதுபோலத்தான் இருக்கும் போலிருக்கிறது! இலட்சியம் இல்லாத இவர் இம்மாதிரியாக மக்களிடம் பேசி ஏமாற்றப் பார்க்கிறார்!

நான் கூறிய இந்தத் திட்டத்தில் ஊழல் இருப்பதாக நீங்கள் சொல்ல முடியுமா?—('இல்லை; இல்லை' என்று கூட்டத்தினர் பதில் அளித்தனர்.)

ஆகவே, இதே மேடையிலிருந்து எம்.ஜி.ஆரைப் பார்த்துக் கேட்கிறேன்: உங்களுக்குத் தைரியமிருந்தால -- மக்களிடம் நீங்கள் நல்ல மதிப்பு உள்ளவராக இருந்தால் -- எங்காவது ஓர் இடத்தில் மேடை போடுங்கள்; உங்களுக்கு வேண்டியவர்களையே நடுவர்களாகத் தீர்ப்புக் கூற வையுங்கள்; அந்தக் கூட்டத்தில் ஒரு கோப்பையில் விஷம் வைப்போம்; இந்தச் செம்பரம்பாக்கம் திட்டத்தைப் பற்றி விவாதிப்போம்; இதில் ஊழல் இருப்பதாக நிரூபிக்கப்பட்டால் நான் அந்த விஷத்தைக் குடித்து என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்.

அந்தத் திட்டத்தில் ஊழல் இல்லையென்று நிரூபிக்கப்பட்டால் நீங்கள் அந்த விஷத்தைக் குடிக்க வேண்டும்; இதைச் சவாலாக உங்களுக்கு விடுகிறேன் -- தயாரா -- பதில் சொல்லுங்கள்!"

சென்னையில் குழந்தைகள் நாள்

ஆறாயிரம் குழந்தைகள் அணிவகுக்கும் காட்சி

சென்னை, நவ. 24—

நவம்பர் 25-ம் நாள் 'குழந்தைகள் நாள்' கொண்டாட்டத்தையொட்டி சென்னை நகரில் உள்ள எல்லா பஸ் டெர்மினல்களுக்கும் -- நேரு விளையாட்டு அரங்குக்கும் இடையே குழந்தைகளுக்கான பஸ்கள் விடப்படும்.

நேரு விளையாட்டரங்கில் குழந்தைகள் பேரணி நடக்கும்; கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வார்.

குழந்தைகள் நாளை முன்னிட்டு 'இளைஞர் சுடர்' ஏற்றப்படும்; விமானங்கள் ரோஜா மலர் தூவும்.

சுமார் 6,000 குழந்தைகள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வர்.

பள்ளிப் பிள்ளைகள் சுமார் 50,000 பேர் இந்த நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவர்.

அமைச்சர் நாவலர் தலைமையில் விழா

நேரு பிறந்த நாளையொட்டிக் குழந்தைகள் விழா 25—11—72 மாலை 6 மணிக்கு சென்னை இராஜாஜி மண்டபத்தில் கல்வியமைச்சர் நாவலர் தலைமையில் நடைபெறும்; திரு. கே. சந்தானம், திரு. டி. செங்கல்வராயன் ஆகியோர் உரையாற்றுவர்.

மாலை 7 மணி முதல் 9 மணி வரை குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினர் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

அன்று காலை 10 மணிக்கு சபையர் திரையரங்கில் திரைப்படக் காட்சியை அமைச்சர் சத்தியவாணிமுத்து தொடங்கிவைப்பார்.

மாலை 4-மணிக்கு நேரு விளையாட்டரங்கில் குழந்தைகள் அணிவகுப்பை அமைச்சர் நாவலர் தொடங்கிவைப்பார்; அமைச்சர் க. இராசாராம் மலர் வெளியிடுவார்; மேயர் ஆறுமுகம் பரிசு வழங்குவார்.

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம் நிகழ்ச்சிகள்

நவ. 25 காலை 5 மணி: திண்டிவனம்—பொதுக்கூட்டம்.

நவ. 26 காலை 8 30 மணி: ஆம்பூர்—திருமண நிகழ்ச்சி; மாலை 6 மணி: திருவண்ணாமலை—பொதுக் கூட்டம்.

ஆந்திரத்தைப் பிரிக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்' என்பது அந்தச் சட்டம்; அதன் பெயர்:— 'முல்கி சட்டம்.'

50 ஆண்டுகளாக இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது.

சுதந்தரத்துக்குப் பிறகு ஐதராபாத் சமஸ்தானம் (தெலுங்கானா பகுதி) ஆந்திரத்துடன் இணைக்கப்பட்டது.

அதன் பிறகு, 'முல்கி சட்டம்' இனிமேல் செல்லாது' என்று ஆந்திர உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது; உயர் நீதிமன்றமும், 'முல்கி சட்டம் செல்லாது' என்று தீர்ப்புக் கூறியது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து தெலிங்கானாக்காரர்கள், இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள்; தலைமை நீதிமன்றம் 'முல்கி சட்டம் தொடர்ந்து செல்லுபடியாகும்' என்று தீர்ப்பு வழங்கியது; கடந்த அக்டோபர் மாதம் 2-ந்தேதி இந்தத் தீர்ப்பு கூறப்பட்டது.

முல்கி சட்டம் நடைமுறையில் இருந்தால், ஆந்திரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெலுங்கானா பகுதியில் அரசாங்க வேலை பார்க்க முடியாது; எனவே, 'முல்கி சட்டம் வேண்டாம்' என்று அவர்கள் போராடி வருகிறார்கள்.

அந்தச் சட்டத்தால் தெலுங்கானாக்காரர்களுக்கு நன்மை கிடைக்கிறது என்பதால், 'முல்கி சட்டம் வேண்டும்' என்று அவர்கள் எதிர்ப் போராட்டம் நடத்துகிறார்கள்.

பேச்சாளர் முகவரி:

கோபி தமிழரசு,
3/35, கருமாயா வீதி,
கோபிசெட்டிப்பாளையம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும்; அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] இந்த வெளியிடப்படுகிறது.

சாதி ஒழியாத வரையில் நாடு முன்னேறாது

★

தலைமையமைச்சர் இந்திரா வேதனை

தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுக்க நடவடிக்கை

புதுடில்லி, நவ. 24—

"நாட்டில் சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றி மாநில முதலமைச்சர்களுடன் மீண்டும் விவாதம் நடத்த எண்ணியிருக்கிறேன்.

"ஒவ்வொரு தொகுதியிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்கான திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

"இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏதாவது சுணக்கங்கள் காணப்பட்டால் அதை உடனே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

"வரலாற்றின் துவக்கக் காலத்தில், சாதி வகுப்பு முறைக்கு என்ன நியாயம் இருந்தபோதிலும் இப்போது அதனால் நாட்டுக்குப் பெரும் கேடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது; இந்த முறையை அழித்தாகவேண்டும்; இல்லாவிட்டால் இந்த நாடு முன்னேற்றமடைய முடியாது.

"இந்தியா பொருளாதாரத் துறையில் வளமை நிலையை அடைந்தாலும்கூட, நாட்டில் சாதி -- வகுப்பு முறை நீடித்தால் அந்த வளமை நிலைத்திராது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அரிசனங்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள் அல்லது மிருகத்தனமாகக் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்றசெய்திகளைப் பார்க்கும்போது மனம் எவ்வளவு வேதனைப்படுகிறது? இம்மாதிரி கொடுமைகளைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாறு சிறிது காலத்திற்கு முன்பு எல்லா முதலமைச்சர்களுக்கும் எழுதியிருந்தேன். அப்படி ஏதாவது நடந்தால் முதலமைச்சர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தியிருந்தேன்.

இந்தப் பிரச்சினையில் இன்னொரு அம்சத்தையும் குறிப்பிட விரும்புகிறேன்; இந்தத் தீமை நாட்டில் மிகவும் ஆழமாக வேரூன்றியிருக்கிறது; அரசு எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளால் மட்டும் இதை ஒழித்துவிட முடியாது.

அரிசனங்கள் -- மலை சாதியினர் முன்னேற்றத் திட்டங்கள், மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டவை; இந்தத் திட்டங்களை மத்திய அரசு நேரடியாகத் தமது பொறுப்பில் எடுத்துக்கொள்ளலாமா என்பதைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களுடன் விவாதிக்க விரும்புகிறேன்' அம்மாதிரிசெய்ய வேண்டும் என்று சிலர் கேட்டிருக்கிறார்கள்; ஆனால், எதிர்க்கட்சித் தலைவர்கள் இதற்குச் சம்மதிக்காவிட்டால், மத்திய அரசு இதை ஏற்றுக்கொள்ளுவது கடினமாக இருக்கும்; ஏனெனில், மற்றக் கட்சிகளால நடத்தப்படும மாநில அரசுகள் இந்த முயற்சியை மத்திய அரசின தலையீடு என்று கருதக் கூடும்."

பத்திரிகைகளின் விஷமப் பிரசாரம்

போலீசுக் கமிஷனர் மறுப்பு

சென்னை, நவ. 23—

சென்னைக் காவல் நிலையம் ஒன்றில் போலீசாரால் அடிக்கப்பட்டு ஒருவர் மரணம் அடைந்ததாகச சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியினை மறுத்து சென்னை நகர போலீசு ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"இன்று சில பத்திரிகைகளில், 'சென்னை பாலமுத்து தெருவில் வசித்த மணி என்பவர், டி-1 போலீசு நிலையத்தில் அடிக்கப்பட்டு மரணமடைந்தார்' என்று வெளியாகியுள்ள செய்தி தவறானது.

உண்மை நிலைமை என்னவென்றால், சென்னை-14, பாலமுத்து தெருவிலுள்ள கருப்பசாமி முதலியாரின் மகன் மணி என்பவர், 5—11—72 அன்று போலீசு நிலையத்தில் கொடுக்கப்பட்ட ஒரு புகாரின் காரணமாக, 447 -- 426 பிரிவுகளின்படி கைது செய்யப்பட்டார்; 5—11—72 அன்று கைதான அவர் அன்றே ஜாமீனில விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், அவர் போலீசுப் பதிவேடுகளில் இடம் பெற்றவருமாவார்; அவருக்கு ஏற்கனவே டி.பி.-யும் ஆஸ்துமா வியாதியும் இருந்தன என்பதை அவருக்குரிய மருத்துவச் சான்றிதழ் தெரிவிக்கிறது.

அவர், 6-ந் தேதி ஆஸ்துமா நோயின் காரணமாகப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச சிகிச்சை அளிக்கப்பட்டார்; 21—11—72 அன்று இரவு மரணமடைந்தார்.

இது சம்பந்தமாக மாநில மாஜிஸ்திரேட் விசாரணை நடத்தக் கேட்டுக்கொள்ளப்பட்டார்; அவர் நடத்திய விசாரணையில், 'மணியின் மரணம் இயற்கை காரணங்களால் விளைந்தது' என்று கூறினார்.

அவரது மரணம் குறித்து வெளியான பிரேத விசாரணைக் குறிப்பிலும், 'அவரது இறப்பு, வியாதியால் ஏற்பட்டது' என்று உள்ளது; எனவே, அவரது மரணம் போலீசு நிலையத்தில் போலீசாரால் ஏற்பட்டது அல்ல."